சூத்திரம்
www.sooddram.com
The Formula

செய்திகள் | கட்டுரைகள் | வடக்கு கிழக்கு மாகாணத்தில் | எழுத்துரு | Contact us at: sooddram@gmail.com

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அறுதிப் பெரும்பான்மை பெற்றது! ஜனநாயக

சூத்திரம்
முதற்பக்கம்
FONTS/எழுத்துரு
சர்வதேச நேரம்
தொடர்புகளுக்கு
கட்டுரைகள்
பொதுவிடயம்
அரசியல் சமூக ஆய்வு
இலங்கைத் தமிழர் போராட்டம்
இலங்கையில் உள்ள ஏனைய அரசியல் அமைப்புகள்
சர்வ தேச அரசியல்
அரசியல் தீர்வு
கவிதைகள்
சமூக விழிப்பு
போராட்டம்
பொது விடயம்
புகைப்படங்கள்
எமது வாழ் நிலங்கள்
போராட்டங்கள்
போராட்ட தடயங்கள்
இணையத்தளங்கள்
கண்ணோட்டம்
பூந்தளிர்
தூ
தேனி

# 990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்......

## *நடந்த வன்கொடுமைகள்! (பகுதி 16)*

ஒருநாள் மாலைப் பொழுதில் பத்துப்பதினைந்து புலி விலங்குகள் ஓர் குழியை நோக்கிச் சென்றனர். அந்தக் குழியில் புளொட் ஆதரவாளர் ஒருவர் இருந்தார். அவர் ஆறு ஏழு நாட்களாக வெளியே வராமல் இருந்தார். அவருக்கு ஏதோ உடல் பாதிக்கப்பட்டுள்ளது போலும் என்று நினைத்துக் கொண்டேன். இந்தப் புலிகள் அவரது குழியை நோக்கிச் செல்வதைக் கண்டு நானும் உன்னிப்பாகக் கவனித்தேன்.

உள்ளே இறங்கிய விலங்குகள் போர்வையால் சுற்றப்பட்ட உடல் ஒன்றை வெளியே கொண்டு வந்து ஓர் வாகனத்தில் ஏற்றி வெளியே கொண்டு சென்றனர். நான் இங்கு வருவதற்கு முன்னர் இதுபோன்று இருவரை போர்வையால் சுற்றி கிடங்கிலிருந்து வெளியே எடுத்துச் சென்றதாக எனக்கு அருகில் இருந்த அருமைநாதன் என்பவர் கூறினார்.

என்னை இவர்கள் பிடித்து வந்து 17 மாதங்கள் முடிந்திருந்தன. இந்தக் கால கட்டத்தில் தீபாவளி, நத்தார் மற்றும் ஓர் இவர்களது விசேச தினத்தில் மட்டுமே மாட்டு இறைச்சிக் கறி வழங்கினர். இவை போக இத்தனை மாதங்களிலும் அவர்கள் வழங்கிய இரண்டு நேர உணவான பாணும், சோறும்தான் எங்களது உணவாக இருந்தது.

நான் வரும் போது இருந்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயிருந்தனர். அந்த இடங்களுக்குப் புதியவர்களை கொண்டு வந்திருந்தனர். இந்த பழைய சகோதரர்களும் எடைகுறைந்து பலதரப்பட்ட நோய்வாய்களுடன் அவதியுற்று வந்தனர். அங்கு இருந்த மருந்து ஆஸ்பிரின், பனடோல், டிஸ்பிரின், மூவ், வின்ரோஜன்

**உனக்கு நாடு இல்லை என்றவனைவிட நமக்கு நாடே இல்லை என்றவனால்தான் நான் எனது நாட்டை விட்டு விரட்டப்பட்டேன்.......**



ராஜினி திரணகம
MBBS(Srilanka)
Phd(Liverpool, UK)

**"அதிர்ச்சி ஏற்படுத்தும் சாமர்த்தியம் விடுதலைப்புலிகளின் வலிமை மிகுந்த ஆயுதமாகும்.** விடுதலைப்புலிகளுடன் நட்பு பூணுவது என்பது வினோதமான சுய தம்பட்டம் அடிக்கும் விவகாரமே. விடுதலைப்புலிகளின் அழைப்பிற்கு உடனே செவிமடுத்து, மாதக்கணக்கில்

ஈழச் சுவர்
தமிழ் நியூஸ் வெப்
பத்மநாபா
மலையகம்
பார்வை
அலை
தாயகம்
ஈழநாசம்
நெருப்பு
அதிரடி
அதிரடி மீடியா
ஈ.பி.ஆர்.எல்.எவ்.
ஆனந்தசங்கரி
விழிப்பு
ரெலோ நியூஸ்
உதயம்
தேனகம்
புளொட்
ஈபிஆர்எல்எவ் வெப்
விடிவெள்ளி
எங்கள் பூமி
இலங்கை கம்யூனிஸ்ட்
எங்களைப்பற்றி
General

மற்றும் காயத்துக்குப் போடும் மருந்துகளைத் தவிர வேறு எந்தவித மருந்துகளும் அங்கு கிடையாது. தகுதியுற்ற மருத்துவர் ஒருவர் கூட அங்கு வந்தது கிடையாது. யாரும் மருத்துவர் வேண்டும் என்று கோரியதும் கிடையாது. காரணம் நோய்வாய்பட்டென்றாலும் இறந்துவிடுவது நல்லது என்று நினைத்துக்கொண்டனர் அங்கிருந்தவர்கள்.

இந்தப் பதினெட்டு மாதங்களில் எனது காலில் பூட்டப்பட்டிருந்த சங்கிலி விலங்கு தொடர்ந்து இரு கால்களிலும் உரசியதில் ஒருபக்கத்தில் புண்ணும், இன்னொரு பக்கத்தில் சங்கிலி அண்டியதில் தடித்தும் கறுத்தும் உனர்வின்றி இருந்தது. நான் உடுத்தியிருந்த சறம் நொந்து நூளாகி தனது தடிப்புத் தன்மையை இழந்து, பன்னாடை போல் தோற்றமளித்தது. இரவில் அதுதான் எனக்குப் போர்வை, காலையில் அதுதான் முகம் துடைக்கும் துவாய். குளித்தப்பின்னரும் அதுதான் ஈரத்தை உறுஞ்சி எடுக்கும் சாதனம். இப்படிப் பல வகையான உதவிகளைச் செய்து என் மானத்தையும் காப்பாற்றியது. ஒரு சறம் தனது வாழ்நாளில் இரவு பகலாக தொடர்ந்து 18 மாதங்கள் உழைத்தது என்றால் அந்த கிப்சறத்துக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். இப்போது கூட அந்தச் சறத்தை நான் பாதுகாப்பாக வைத்துள்ளேன். ஏனெனில் எனது கஸ்ர காலத்தில் எனக்கு அது துணையாக இருந்ததை என்னால் மறக்க முடியவில்லை.

நான் கிறிஸ்தவன், ஆனால் தீவிர கிறிஸ்தவன் அல்ல. பிடிக்கப்பட்டு இந்த மட்டத்துக்கு வந்த இரண்டு மாதங்களாக தினமும் நான் ஜேசுவை மிகவும் பயபக்தியோடு வணங்கி வருந்தி முறையிட்டு பல முயற்சிகளைச் செய்து விடுதலைக்காக மன்றாடி வந்தேன். என்னையும் என்னுடன் கூட இருப்பவர்களையும் உடற் சேதம் இல்லாமல் விடுதலை அடையச் செய்யும் ஜேசுவே என்று முழந்தாளிட்டு வணங்கி வந்தேன். எந்தப் பயனும் கிடைக்கவில்லை. சில மாதங்களில் முருகனை வழிபட ஆரம்பித்தேன். “தேங்காய் உடைத்துப் பொங்கல் வைப்பேன், நல்லூருக்கு விரதம் இருப்பேன்” என்றெல்லாம் வேண்டிப் பார்த்தேன், அதிலும் எந்தப் பயனும் கிடைக்கவில்லை. வினாயகர் சுத்தமான கடவுள் அவரை வணங்கினால் வேண்டியது கிடைக்கும் என்று எனக்கு அருகில் திரு. ஈசன் என்ற பஞ்சலிங்கம் (நெடுந்தீவு) சொன்னார். நானும் அவரும் சேர்ந்து வினாயகரை வணங்கி வந்தோம். இதிலும் எந்தப் பயனும் கிடைக்கவில்லை. புலிகள் எங்களுக்கு ஏதாவது சமூகப் புத்தகங்கள் கொடுத்திருந்தால் சற்று நின்மதியாக இருந்திருக்கும். காலை முதல் இரவு வரை நாங்கள் தலையைக் குனிந்து கொண்டு இருக்க வேண்டும். இப்படிப் 18 மாதங்கள் என்றால் எவ்வளவு கொடுமை!

ஆயினும் 18வது மாதம் ஒருநாள் (திகதியை மறந்துவிட்டேன், காரணம் காலையும் மாலையும்தான் எங்களுக்குத் தெரியும், திகதிகளை உண்மையில் தொலைத்து விட்டிருந்தோம் அந்த நாட்களில்) காலை தீபன் என்ற விசாரணை செய்யும் நபர் வந்தார். நீண்ட பட்டியல் ஒன்றினைப் படித்தார். அந்தப் பட்டியலில் எனது இலக்கமான கே.87ம் இருந்தது. மொத்தம் நூறுபேரது பட்டியல் அது.

அவர்களின் குழுக்களில் இருந்து ஆலோசனை வழங்கி, கடிதங்கள் வரைந்து, கூட்டங்களில் பேசித்திரிந்து, அவர்களுக்கு அடிவருடிகளாக இருந்தவர்கள்மீது கூட சூசகமான எச்சரிக்கைகள், காலப்போக்கில் அவர்கள்மீது சந்தேகம் கொண்டு விடப்பட்டன………”

(முறிந்த பனை நூலில் இருந்து)

(இந் நூலை எழுதிய ராஜினி திரணகம விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் முக்கிய உறுப்பினரான பொஸ்கோ என்பவரால் 21-9-1989 அன்று யாழ் பல்கலைக்கழக வாசலில் வைத்து சுட்டு கொல்லப்பட்டார்)

Its capacity to shock was one of theL.T.T.E'smost potent weapons. Friendship with theL.T.T.E. was a strange and self-flattering affair.In the course of the coming days dire hints were dropped for the benefit of several old friends who had for months sat on committees, given advice, drafted latters, addressed meetings and had placed themselves at the L.T.T.E.'s beck and call.

From: Broken Palmyra

[இலங்கையின் 7 வது பாராளுமன்றத் தேர்தல்! நடக்கும் என்றார் நடந்து விட்டது! நடக்காது என்றார் இனி நடந்துவிடுமா?]

(சாகரன்)

வெளியே வரும்படி பணித்த அவர், விசாரணைக்குப் பிரிவுக்குச் செல்லும்படி உத்தரவிட்டார். வழக்கமாக 10பேர் வரைதான் விசாரணைக்கு என்று பூசை செய்வார்கள்! ஆனால் இன்று நூறு பேரை எடுக்கின்றனர். மரண குழிக்குள்தான் அனுப்பப் போகிறார்களோ என்று பயந்து கொண்டு கால்விலங்குடன் அணிவகுத்துச் சென்றோம்!

அனைவரையும் அமரும்படி கூறிவிட்டு முதலிருந்து 25வது நபர்வரை அழைத்தனர். நானும் அதில் அடங்கும்! எனது பெயர் முகவரியை குறித்துக்கொண்டு, உன்னை விடுவித்தால் எங்கே தங்கியிருப்பாய் என்று கேட்டார் ஜீவா என்ற புலி நபர். இதே முகவரியில்தான் இருப்பேன் என்று கூறினேன். பிறிதொரு வெள்ளைத் தாளில் அவர்களே அச்சிட்டு கொண்டு வந்திருந்தனர், நிபந்தனை அடங்கிய படிவம் ஒன்றினை. அதில், “ஈ.என்.டி.எல்.எப். இயக்கத்துடன் தொடர்பு வைத்தாலோ அல்லது அவர்களுடன் இணைந்து செயற்பட்டாலோ, அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இயங்கினாலோ நீங்கள் தரும் தண்டனையை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன்” என்று அதில் ரைப் செய்யப்பட்டிருந்தது. அவர்கள் காட்டிய இடத்தில் நான் கையொப்பம் இட்டேன். இதே போல் அனைவரிடத்திலும் எழுதிப் பெற்றுக் கொண்டு, கைவிரல் அடையாளங்களையும் பதிவு செய்தனர். புகைப்படமும் எடுத்துக்கொண்டனர். இவை எல்லாம் முடிய மதியம் இரண்டுமணியாகிவிட்டது. மீண்டும் எங்கள் கொட்டடிக்குச் சென்று அமரும்படி உத்தரவிட்டனர்.

விடுவிக்கப் போகிறார்கள் என்று மனதுக்குள் தோன்றினாலும், முளங்காவில்லுக்குக் கொண்டு போய் பரலோகம் அனுப்பப்போகிறார்களோ என்ற சந்தேகமும் மனதுக்குள் ஓர் மூளையில் உரசிக் கொண்டுதான் இருந்தது. மாலை உணவும் கிடைத்தது. தகவல் ஒன்றும் இல்லை! இரவு நித்திரை வரவில்லை. அப்பையா அண்ணன், தம்பி, “உன்னை விட்டினம் என்றால் என்ர வீட்ட போய் சொல்லும் நான் உயிருடன் இருக்கிறேன் என்று” இப்படிப் பலரும் என்னிடம் தங்களது வீடுகளுக்குச் சென்று கூறும்படி கேட்டுக்கொண்டனர். நானும் சம்மதித்து உறுதி அளித்தேன். ஆயினும் எனது மனம் என்னை உறுத்திக்கொண்டே இருந்தது.

எப்படியாவது அந்தக் குழிகளுக்குள் வைக்கப்பட்டிருந்த எங்கள் சகோதரர்களுடன் கதைக்க வேண்டும் என்று நினைத்தது நடக்காமல் போய்விட்டதே! எப்படி அவர்களுடன் கதைப்பது? அவர்களை எப்படிக் காப்பாற்றுவது என்று விடை தெரியாமல் செல்லப் போகிறோமே என்ற கவலை வாட்டியது. ஒரு தடவையாவது அந்தக் கிடங்குக்குள் நான் இறங்கிப் பார்க்க வேண்டும் என்று நினைத்திருந்தேன். அவர்கள் இத்தனை மாதங்கள் எப்படி அந்தக் குழிகளுக்குள் வாழ்ந்திருப்பார்கள், அந்தக் கஸ்ரத்தை நானும் அனுபவித்துப் பார்க்க வேண்டும் என்றும் நீண்ட நாட்களாக நினைத்திருந்தேன். இவ்வளவு கொடுமைகளையும் சந்தித்துவிட்டேன் அந்தக் கொடுமையையும் ஏன் விட்டுவைப்பான் என்ற விபரித ஆசையும் இருந்தது. அவர்களுக்கு ஓர் ஆறுதல் வார்த்தை கூட சொல்லாமல் போகவா காலையில்


வெல்லப்போவது யார்.....? பாராளுமன்றத் தேர்தல் 2010

(சாகரன்)

*பாராளுமன்றத் தேர்தல் 2010*

தேர்தல் விஞ்ஞாபனம்

*- பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி*

1990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்......

*நடந்த வன்கொடுமைகள்!*

(கிறேசியன், நாவாந்துறை)

***சமரனின் ஒரு கைதியின் வரலாறு***

*“ஆயுதங்கள் மேல் காதல் கொண்ட மனநோயாளிகள்.”*

**வெகு விரைவில்...**

மீசை வைச்ச சிங்களவனும் ஆசை வைச்ச தமிழனும்

(சாகரன்)

*இலங்கையில்*

‘இராணுவ’ ஆட்சி வேண்டி நிற்கும் மேற்குலகம், துணை செய்யக் காத்திருக்கும் சரத் பொன்சேகா கூட்டம்

(சாகரன்)

*ஜனாதிபதி தேர்தல்*

எமது தெரிவு எவ்வாறு அமைய வேண்டும்?

-பத்மநாபா ஈபிஆர்எல்எவ்

*ஜனாதிபதித் தேர்தல்*

ஆணை இட்ட அதிபர் ‘கை’, வேட்டு வைத்த

புலி நபர்களிடம் கேட்டுப் பார்ப்போம் என்ற உறுதியுடன் உறங்கினேன்.

மறுநாள் காலைக்கடன் முடிந்ததும் புலி நபர் ஒருவர் வந்து மீண்டும் அதே இலக்கங்களைப் படித்தார். எழுந்து வரிசையாக நின்றோம். விசாரணைப் பிரிவுக்கு அழைத்தனர். எங்கள் கால் சங்கிலிகள் வெட்டப்பட்டன. வெட்டப்பட்டப் பின்னர் முதல் அடியை எடுத்து வைக்க மிகவும் சிரமமாக இருந்தது. இடுப்புப் பகுதி இறுகிப் போய் இருந்தது. 18 மாதங்கள் கால்கள் விலகாமல் இந்தததினால் ஏற்பட்ட குறைபாடு. சிரமப்பட்டு நடக்க நடக்க கால்கள் சுதந்திரம் அடைந்ததை உணர்ந்தேன்.

சுமார் 11மணியளவில் மூன்று லொறிகள் வந்து நின்றன. நான் மண்டபத்தினுள் சென்று என்னுடன் இருந்தவர்களிடம் விடைபெற்றேன். அப்பையா அண்ணன், குகன் அண்ணன், ஈசன், ராஜா, கண்ணன், காந்தன், ஜேக்கப் அண்ணன், ஜோதி, பாலசுப்பிரமணியம், ஜெகநாதன், தயாபரன், அன்ரனி, லூக்கா போன்ற அனைவரிடத்திலும் சொல்லிவிட்டு வரிசைக்கு வந்தேன். அப்போது மஞ்சு என்ற புலி விலங்கு நின்று கொண்டிருந்தார் அவரிடம், அண்ணே, ''நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்'' என்றேன். என்ன என்றார்,

(தொடரும்...)

ஜெனரல் 'துப்பாக்கி' ….. யார் வெல்வார்கள்?

(சாகரன்)

சம்பந்தரே! உங்களிடம் சில சந்தேகங்கள்.

(சேகர்)

அனைத்து இலங்கைத் தமிழர்களும் ஒற்றுமையான இலங்கை தமது தாயகம் என மனப்பூர்வமாக உரிமையோடு உணரும் நிலை ஏற்பட வேண்டும்.

(அ. வரதராஜப்பெருமாள்)

*தொடரும் 60 வருடகால காட்டிக் கொடுப்பு*

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பாடம் புகட்டுவார்களா?

(சாகரன்)

***ஜனவரி இருபத்தாறு!***

விரும்பியோ விரும்பாமலோ இரு கட்சிகளுக்குள் ஒன்றை தமிழ் பேசும் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.....?

(மோகன்)

2009 விடைபெறுகின்றது! 2010 வரவேற்கின்றது!!

*'ஈழத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பாசிசத்தின் உதிர்வும், ஜனநாயகத்தின் எழுச்சியும்'*

(சாகரன்)

*சபாஷ் சரியான போட்டி.*

மகிந்த ராஜபக்ஷ Vs சரத் பொன்சேகா.

(யஹியா வாஸித்)

கூத்தமைப்பு

கூத்தாடிகளும் மாற்று தமிழ் அரசியல் தலைமைகளும்!

(சதா. ஜீ.)

*தமிழ் பேசும் மக்களின் புதிய அரசியல் தலைமை*

மீண்டும் திரும்பும் 35 வருடகால அரசியல் சுழற்சி! தமிழ் பேசும் மக்களுக்கு விடிவு கிட்டுமா?

(சாகரன்)

கப்பலோட்டிய தமிழனும், அகதி (கப்பல்) தமிழனும்

(சாகரன்)

*சூரிச் மகாநாடு*

(பூட்டிய) இருட்டு அறையில் கறுப்பு பூனையை தேடும் முயற்சி

(சாகரன்)

பிரிவோம்! சந்திப்போம்!! மீண்டும் சந்திப்போம்! பிரிவோம்!!

(மோகன்)

*தமிழ் தேசிய கூட்டமைப்புடன் உறவு*

பாம்புக்கு பால் வார்க்கும் பழிச் செயல்

(சாகரன்)

இலங்கை அரசின் முதல் கோணல் முற்றும் கோணலாக மாறும் அபாயம்

சாகரன்

ஈழ விடுலைப் போராட்டமும், ஊடகத்துறை தர்மமும் - சாகரன்

*அடுத்த கட்டமான அதிகாரப்பகிர்வு முன்னேற்றமானது 13வது*

*[திருத்தத்திலிருந்து முன்னோக்கி உந்திப் பாயும் ஒரு விடயமே](#)*

- அ.வரதராஜப்பெருமாள்

***மலையகம் தந்த பாடம்***

[வடக்கு கிழக்கு மக்கள் கற்றுக்கொள்வார்களா?](#) - சாகரன்

*[ஒரு பிரளயம் கடந்து ஒரு யுகம் முடிந்தது போல் சம்பவங்கள் நடந்து முடிந்துள்ளன.!](#)* - அ.வரதராஜப்பெருமாள்

அமைதி சமாதானம் ஜனநாயகம்
www.sooddram.com